0-1-3 சிலோன் 0-0-9 உள் நா

தாய் நாடு

மலர் 1

இதழ் 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1936
MADRAS

Hutchins & Co., Recording Department, Mount Road, MADRAS.

எங்கள் மகத்தான

மார்ச்சுமாத வெளியீடு.

மிஸ். எம். எஸ். சுப்புலக்ஷ்மி

(தென்னிந்திய கோகிலகானம்.)

இந்த ரிக்கார்டு கேட்கும்பொழுது பக்க வாத்தியங் களின் இனிமை யை கவனிக்கவும்.

இந்த ஆர்டிஸ்டின் முன் வெளியிடப் பட்டுள்ள ரிகார்டுகள் கீழ் கூறப்படுள்ளன. அவையும் இத்தகையதே.

B. T. 2337

கோரிஸேவிம்ப
பாகம் 1 & 2—கரஹரபிரியா.

B. T. 2047 — B. G. 2068

B. G. 2351 — B 6. 2352

சுப்பிரமணியம்.

B, E. 2348

ஒட்டுகொடுங்கள்
காமிக்.

சுமக்கமாட்டாத
வரி—காமிக்.

R. E. 4028 — B. 2028

இந்த காமிக் ரிக்கார்டு உங்கள் விலா எலும்பை முறியச் செய்யும்.

விலாத்திகுளம் சுவாமிகள்.



B. T. 2357

ஆலாபனை
பாகம் 1 & 2 கரஹரபிரியா

B. T. 2092 — 2343

THE MUSICAL PRODUCTS LTD.,

MADRAS, CALCUTTA, COLOMBO, BOMBAY.

Registered No. M.

"தாய் நாடு"

ஸினிமா, நாடகம், நகைப்பு, சங்கீதம், உலகச் செய்திகள்,
கற்பனைக் கதைகள் கொண்டது

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

ஆசிரியர்கள் :—பத்மன்-செல்லப்பன், P. M. பாக்ஷா முதலியார்.

மலர் 1	1936-ளு மார்ச்சு-மீ 1உ ஞாயிற்றுக்கிழமை	இதழ் 6

"இந்தியா பேசுகிறது"

(ஆசிரியர் பத்மன்-செல்லப்பன்)

பல் வளம் நிறைந்தும் நாகரீகத்தில் சிறந்தும் கைத்தொழிலில் மிகுந்தும் விளங்கா நிற்பது நமதரும் "தாய் நாடாகிய இந்தியா" என்பது மிகையாகாது. முற்காலத்தில் கிரேக்கரும், இத்தாலியரும், இதர நாட்டினரும் நமது இந்தியாவை கொண்டாடினதற்கும் காரணம் இதுவே யாகும். ஆக இத்தகைய சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் கொண்ட இந்தியாவை எவ்வளவுக் கெவ்வளவு கேவலப் படுத்தலாமா அவ்வளவு கேவலப்படுத்தும் படி "வங்காள ஈட்டி வீரன்" என்ற ஓர் படத்தை மேனாட்டார் தயாரித்துள்ளார் இப் படத்தில் இந்தியர்கள் அசத்திய வந்தவர் களென்றும், சக்தியற்றவர்களென்றும் இந்துக் களை கேவலப்படுத்தும்படியாக படம் தயாரித் துள்ளார்கள்.

"இந்தியா பேசுகிறது" என்ற மற்றொரு படத்தை அமெரிக்கர்கள் தயாரித்தார்ள். இந்தியர்களையும் கேவலப்படுத்தும் படங்களில் இப்படம் தலைமை வகிக்குமென்பதுண்மை. இப்படம் இந்து மதத்தையும் இந்தியர் களையும் கேவலப்படுத்தும் நோக்கத்துடனே தயாரித்துள்ளார் என்பது உண்மை. இப்படி ஒரு நாட்டை கேவலப்படுத்தும் படியாக தயாரிக்கும் படத்தின் மீது காருண்யம் பொருந்திய ஸென்ஸார்போர் அங்கத்தினர் கள் பார்வை படாமல் இருப்பதாகாக அழு வதா சிரிப்பதா? என்றுதான் கேள்வி. நமது இந்தியாவில் இப்படி இதரநாட்டில் ஊழல் களை விளக்கும்படியாக ஓர் படத்தை தயாரித் தால் அப்படத்தை ஷை போர்டார் காட்டு தற்கு அனுமதி அளிப்பார்களா?............

சமூக சீர்திருத்தத்திற்கு வேண்டிய நீதி பொக்கிஷங்களை கொண்டதும், தீண்டாமை யில்லகலே முக்கிய நோக்கமாகக் கொண்ட "மஹாத்மா" என்ற படத்தை போர்டார் ஸென்ஸார் செய்ய தடைசெய்தார்கள் என் பதை ரஸிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறோம். "மஹாத்மா என்ற பெயர் மாறி "தர்மாத்மா" என்ற பெயரால் அப்படம் தற்போது "பிராட்வே டாக்கிஸில்" நடந்துக் கொண்டிருப்பதையும் கண்கூடாகக் காணலாம்.

இந்தியாவை கேவலப் படுத்தும்படியாக படம் தயாரித்த அமெரிக்கர்களை என்ன வென்று சொல்வது. "வங்காள ஈட்டிவீரன்" "இந்தியா பேசுகிறது" என்ற படங்கள் இந்தியாவின் எல்லையை எட்டிபார்க்காமல் இருந்தால் அதுவே போதுமானதென் றெண்ணி திருப்தி யடைவோம்.

ரங்கூன் ஸ்டீமர்

(N. L. சர்மா.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

4-வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறியபடி நமது விலாஸினி சற்றுநேரம் ஆலோசனையிலிருந்து அதன் பின் ஓர்வித தீர்மானத்திற்கு வந்து தன்னை ரக்ஷிக்க வேண்டிய பாரத்தை கடவு ளின்பேரில் சுமத்தி விட்டு சற்று தைர்ய மாகவும் ரௌடியினுடைய எண்ணத்திற்கு மனப்பூர்வமாக சம்மதித்தவர் மாதிரி வெளி க்கு அபிநயித்துக் கொண்டு பேசத் தொடங்கி "கண்ணுளா" மிகவும் சந்தோஷித்தேன். தங்களை முதலில் எப்பேர்பட்டவரோ நல்ல வரோ கெட்டவரோ என்று ஒன்றுமே தெரி யாது தத்தளத்துக் கொண்டிருந்தேன், தங் களுடைய வரலாறுகளை எல்லாம் கேட்டதும் என்னுடைய சந்தேகமெல்லாம் தீர்ந்ததோடு தங்கள் மீதில் நம்பிக்கையும் அன்பும் உண் டாகிறது. இனிமேல் தங்களுடன் மன மொத்து சந்தோஷத்துடன் வாழ்ந்திருக்க எனக்கு யாதொரு விதமான ஆக்ஷேபணையும் கிடையாது. தற்சமயம் அடியாள் சொல்லப் போகும் ஒரு விஷயத்திலிருந்து தாங்கள் என்னை வித்யாசமாக எண்ணுமலிருக்கும் படி யாய் ரொம்பவும் வணக்க மாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். அதாவது தாங்கள் என்னு டைய வாஸஸ்தலத்திலிருந்து என்னைத் தந்திர மாக தகுந்த ஏற்பாடுகளுடன் இந்த இடத் திற்குக் கொண்டு வந்திருக்கிறதும் என்னு டைய நற்காலத்துக்காகத்தான் என்றெண்ணி ரொம்பவும் சந்தோஷிக்கிறேன் இரண்டா வதாக உங்களுடைய சவிஸ்தாரங்களையும் நீங்கள் செய்துள்ள சில தீரச் செய்கைகளையும் கண்டும் கேட்டும் மேலும் அளவில்லா ஆனந் தங் கொண்டேன். தங்களுடைய சுபாவத்தை யும் சாமர்த்தியத்தையும் அறியலானதும் என் மனம் முற்றும் தங்களையே நாடிவிட்டது, இது வும் நான் செய்த பூர்வபுண்ணிய பூஜாபல னென்று எண்ணுகிறேன் இனிமேல்பட என் னுடைய மனதையும் தங்கள்பேரில் பதிந்து விட்ட அன்பையும் மாற்ற ஒருவராலும் முடியாது. என்னைப் படைத்த பிரம்மதேவ னும் முடியுமா என்பதும் சந்தேகம்தான்.

இனிமேல் நான் தங்களுக்கு உரியவள் என்பதில் எள்ளளவும் தவறுதல் கிடையாது. கிணற்று நீரை வெள்ளம் அடித்துக் கொண்டு போகா தென்பதைப்போல் என்னுடைய உள்ளத்தையும் அன்பையும் தங்களிடம் ஒப்பு வித்தானபின் எனக்கு புகலிடம் வேறில்லை. இருப்பினும் போவதாயுமில்லை. போவதற்கு மனமுமில்லை. தற்சமயம் நான் என்னுடைய லேயே தனிமையில் இருந்து கொண்டு தேகாரோக்கியத்திற்காக ஒரு தோழியுடன் இதே சௌகர்யமான இடத்தில் ஒய்வுதீர ஸ்ரமபரிஹாரம் செய்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் கொண்டவளாகயிருக்கிறேன் ஆகையால் தாங்கள் இவ்வடியாள் மீது அன்பு கூர்ந்து என்னுடைய விருப்பைப் பூர்த்தி செய்ய வேணுமாய்க் கோருகிறேன். தேகம்

ஊரைவிட்டு மாற்றப் பட்டு அங்குமிங்குமாக அலைந்து வந்ததனால் ரொம்பவும் பலஹீனமாகவும் களைப்பு மாயுமிருக்கிறேன். முடிவாக நான் தங்களுடைய மெய்யன்பிற்குப் பாத்ரப் பட்டவளாகி மனச் சந்துஷ்டயான இந்த இடத்தில் வந்து சேர்ந்ததுபற்றி மிகவும் சந்தோஷமே. ஆனாலும் அடியாள் மிகவும் பலஹீனமாயிருப்பதால் சில நாள் இந்த இடத்தி பூர்ண சுகமடைந்ததும் என்னை இவ்விடத்தினின்றும் மாற்றித் தங்களுடைய பங்களாவிற்கு அழைத்துச் செல்லுங்கள். அதன்பின் அவ்விடத்திலேயே நாம் சுகமாக இருக்கலாம். நான் கோரும் வரம் இதுவே இதிலிருந்து தாங்கள் வித்யாசமாக ஒன்றும் எண்ணமலிருக்க வேணுமாய் ரொம்பவும் கேட்டுக் கொள்ளுகிறேன். என்று நயமாகவும்

பணிவாகவும் தேனொழுகுமாறு அபிநயித்துப் பேசினான்.

இவ்விதமாக அந்த மங்கை கூறிய இனிய மொழிகளைச் செவிகுளிரக் கேட்டுக் கொண்டிருந்த நமது ரௌடிக்கு ஆனந்தமும் குதூகலமும் ஏற்பட்டு அப்படியே பிரமித்து அசையாமல் நின்று விட்டான். அரை நாழிகை கழிந்த பின் முகமலர்ச்சியுடன் கொஞ்சலாகப் பேசத் தொடங்கி "காந்தாமணீ நீ விரும்பிய விதமே செய்யத் தயாராயிருக்கிறேன். இனிமேல் உன் இஷ்டத்திற்கு விரோதமாக நான் ஒருக்காலும் நடக்கமாட்டேன் உனக்கு என்ன விருப்பம் இருந்த போதிலும் அவைகளைத் [illegible]ளமாய் என்னிடம் தெரிவிக்கலாம் உன் [illegible]ய சம்மதம் கிடைக்க வேண்டுமே [illegible]யன்று நான் பட்ட கஷ்டமும் துயரமும் சொல்லத்தரமன்று. உன்னைக் காட்டிலும் சிலாக்யமான பொருள் இவ்வுலகில் எனக்கு வேறு கிடையாது நீ தான் இனிமேல் இந்த என்னுடைய சகல ஐஸ்வர்யத்திற்கும் பாத்யப் பட்டவள் நான் வேறு, நீ வேறு, என்று எண்ணாதே நீ கோரியபடியே ஒரு தோழியுடன் இவ்விடம் தனியாக சில நாள் தங்கியிருந்து இளைப்பாறுவதற்கு வேண்டிய சௌகர்யங்களை இன்று சாயங்காலத்துக்குள் ஏற்பாடு செய்கிறேன். கவலையை ஒழி நான் சென்று என் பங்களாவிலுள்ள உண்மையான வேலைக்காரியிடம் சொல்லி அனுப்புமளவும் ஜாக்கிரதையாயிரு. உனக்குத் தேவையானவைகளை உன்னுடைய தோழிவசம் சொல்லி அனுப்பு. அவள் உன்னுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு சிறத்தையுடன் செய்து வருவாள். எவ்விதத்திலும் நீ இனிமேல் யாதொன்றுக்கும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. நான் சென்று வருகிறேன் அடிக்கடி வந்து உன்னைக் கவனித்துக் கொள்ளுகிறேன்.

தேககத்தை சரிவரக் கவனித்துக் கொள் என்று சொல்லி விட்டுப் புறப்பட்டு சுரங்கத்திற்கு வெளியே வந்து பத்திரமாகக் கதவுகளைப் பூட்டித் தன்னுடைய பங்களாவிற் சேர்ந்தான். பங்களாவை யடைந்ததும் தன்னுடைய பகல் போஜனத்தை முடித்துக் கொண்டு அவ்விடமுள்ள வேலைக்காரிகளில் தனக்கு நம்பிக்கையுள்ள குணவதி என்பவளை யழைத்து அவளிடத்தில் விஷயங்களை விவரமாய் எடுத்துரைத்து அவளுடனும் தன்னுடைய காதலியென மதித்திருக்கும் விலாஸினிக்கு வேண்டிய ஆடை ஆபரணவகைகளும் ஆகாராதிகளுக்கு வேண்டிய ஏராளமான பொருள்களுடனும் சாயங்காலம் புறப்பட்டு நேரே சுரங்கத்திற்குள் நுழைந்து விலாஸினியிடம் என் அன்பே இதோ பார். உன்னுடைய இச்சைப்படியே உனக்கு வேண்டிய எல்லாவித சௌகர்யங்களுடனும் அருங்குணங்களை ஆபரணமாகக் கொண்டுள்ள குணவதி என்னும் இம்மாதையும் உனக்குத் தகுந்த தோழியாயிருக்கவே அழைத்து வந்திருக்கிறேன். சில நாள் அதாவது உன்னுடைய தேகம் சுகமடையும்வரை நீங்கள் இருவரும் சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் பொழுதைப் போக்கிக் கொண்டிருங்கள்.

விரைவில் உன்னுடையதேகம்குணமடைந்து விடும். இன்னும் உனக்கு ஏதேனும் தேவையாயிருந்தால் அதையும் உன்னுடைய தோழியாகிய குணவதியிடம் சொல்லியனுப்பு. காலா காலத்தில் ஆகாராதிகள் சரிவர எடுத்துக்கொள். உனக்கு வேண்டிய வசதிகளெல்லாம் இவ்விடத்திலேயே சௌகர்யமாய் அமைத்திருக்கிறேன். மன நிம்மதியாக இருந்து சரீரத்தை நன்ருகக்கவனித்துக் கொள். "என்று சொல்லிவிட்டு தோழியாகிய குணவதியைப் பார்த்து" பெண்ணே குணவதி! நான் சொன்னவைகளை யெல்லாம் நன்ருய் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிருயல்லவா. உன் எஜமானிக்கு வேண்டிய பணிவிடைகளை ஒழுங்காகச் செய்துவா. அவளுக்கு மனதிருப்தி உண்டாகும்படி நடந்து கொள். ஏதாவது தேவையாயிருந்தால் எஜ

மானியிடம் சொல்லி ஜாக்கிரதையாயிருக்கும் படி கூறிவிட்டு என்னுடைய பங்களாவிற்கு ரகசியமாய் வந்து சொல்ல வேண்டும். நான் அவைகளை கவனித்துக் கொள்ளுகிறேன். எஜமானியை தனியேவிட்டு நீ எக்காரணத்தைக்கொண்டும் கண்டிப்பாய் வெளியே செல்லக் கூடாது. போஜனம், நித்திரை காலங்கள் தவிர மற்ற நேரங்களில் ஏதாவது வேடிக்கையாகப்பேசிக் கொண்டிருங்கள். ஏதேனும் தேவையாயிருந்தாலன்றி நீ உன்னுடைய எஜமானியைத் தனியே விடுத்துச் செல்லக்கூடாது என்பதை மறுபடியும் கண்டித்துக் கூறுகிறேன் ஞாபகத்தில் வைத்துக்கொள். ஜாக்கிரதை "என்று சொல்லிவிட்டு" கண்ணே விலாஸினி நான் சென்று வருகிறேன். நீங்களிருவரும் ஜாக்கிறதையுடனிருங்கள் உடம்பை நன்றாய்ப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து வாயிலைப் பூட்டியானபின் தன்னுடைய இருப்பிடத்தை வந்தடைந்தான்.

தொடரும்

ஐயோ தலைவிதியே

A. குலாம்ரசூல், மேலக்காவேரி.

நேற்றுமாலை மெய்யும் நானும் சினிமாவுக்குப் போவதாகக் கிளம்பினேம். எங்கள் ஊரில் இரண்டு தியேட்டர்கள் இருக்கின்றன. என் நண்பன் மெய்ல் டைமண்ட் சினிமா போகவேண்டும் என்றான் நான் நியூராஜாராம் டாக்கீஸுக்கு போகவேண்டும் என்றேன். ஆதலால் என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு முடிவிற்கு வந்தோம்.

"மெய்ல் ஒரு ரூபாயை எடுத்து சுண்டிவிடு. பூவிருந்தால் டைமண்ட் சினிமா தலை விழுந்தால் ராஜாராம் டாக்கிஸ்" என்றேன். மெயல் ஒரு ரூபாயைச் சுண்டி விட்டான். என் கட்சி தான் ஜயமடைந்தது. ஆகையால் ராஜாராம் டாக்கீஸைக்குதல் போனேம்.

மாலை 5-30 மணிக்கே ராஜாராம் டாக்கீஸில் வெளிப்புறத்தில் ஏராள கூட்டம். படம் 6-30 க்கு ஆரம்பிக்கும் 6-மணிக்கு டிக்கட்டு கொடுக்க ஆரம்பித்தார்கள் டிக்கட்டு கொடுக்கும் இடத்தில் ஒரே நெரிசல்தான்.

நண்பன் மெய்ல் டிக்கட்டு வாங்கிவருகிறேன் என்று சொல்லி 8அணுவை கையில் எடுத்துக் கொண்டு மணிபர்ஸை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றான். ஐயோ செத்தேன்! செத்தேன்!! " என்று கும்பலில் ஓர் கூச்சல் கிளம்பிற்று. சிறிது நேரத்தில் என் நண்பன் கும்பலைவிட்டு வெளியே வந்தான். அவன் சட்டை பலவிடங்களில் கிழிந்து இருந்தது. முகத்தில் யாரே நகத்தால் கீறி இருக்கிறார்கள் அக்காயத்திலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. டிக்கட் வாங்கினையா? என்றேன். அப்பாடா அக்கூட்டத்திலிருந்து தள்ளியது போதும் நீ போய் டிக்கட் வாங்கிவா" என்று சொல்லி 8அணுவையும் என்கையில் கொடுத்தான். நான் 8அணுவையும் வாங்கிக்கொண்டு வேகமாய்க் கூட்டத்தில் புகுந்தேன் நாள் முண்டி முண்டிக்கொண்டு சாதிக் கூட்டம் வரை சென்றேன். அப்பொழுது என்னை பலர் நசுக்கிறார்கள். யாரோ ஒரு முரடன் என்னைப் பிடித்து கூட்டத்திற்கு வெளியே தள்ளி விட்டான், என்றாலும் டிக்கட்டு வாங்க முடியவில்லை.

யாரிடமாவது காசு கொடுத்து டிக்கட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று நின்று கொண்டிருந்தோம்.

"ஐந்து டிக்கட்டுத்தானே" என்று யாரையோ கேட்டுக் கொண்டு ஒரு முரட்டு மனிதன் போனான். அவனிடம் கொடுத்து டிக்கட்டு வாங்கலாம் என்று நினைத்து, "எனக்கும் அப்படியே இரண்டு வாங்கிக் கொண்டு வாருங்கள்." என்று என் கையிலிருந்த 8அணாவைக் கொடுத்தேன். அவன் முதலில் காசைவாங்க மறுத்தான் நான் அவனிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால் புகுந்திருந்தபோது தான் யாராவது எடுத்து இருக்கவேண்டும்.

"நண்பா மணிபர்ஸ் காணோம்" என்றேன். மணிபர்ஸா? காணோமா? நிஜமாகவா? அதில் 15 ரூபாய் வைத்து இருந்தேனே! நான் இரங்கூனிலிருந்து வரும்பொழுது அந்த மணிபர்ஸ் வாங்கி வந்தேன்டா போடா நான்சொன்னபடி நீ டைமன்ட் சினிமாவுக்கு வந்து இருந்தால் என் சட்டையும்போய் பணமும் போய் மணி

பேயின்ட் சின்னில் ஒரு காக்ஷி.

அவன் காசை வாங்கிக் கொண்டு கூட்டத்தில் புகுந்தான்.

6-25க்கு கூட்டமும் கலைந்துவிட்டது. நான் அனுப்பிய ஆளைக்காணவில்லை. அவன் எங்கேயோ கம்பி நீட்டி விட்டான்.

"அவனைப் பற்றி பிறகு யோசிந்துக் கொள்ளலாம். சிக்கிரம் டிக்கட்டு வாங்கு" என்றான் என்நண்பன். நான் காசு எடுப்பதற்காக பாக்கெட்டில் மணிபர்ஸைப் பார்த்தேன். மணிபர்ஸ்காணோம். நான் கூட்டத்தில் பர்ஸூம் போய் இருக்காதுடா" என்றான். எல்லாப்பழியும் என் தலைமேல்தான் விழுகிறது ஐயோ தலைவிதியே!

* * *

யாராவது மணிபர்ஸை எடுத்திருந்தால் தயவு செய்து என் விலாசத்துக்கு தெரிவிக்கவும் அவர்களுக்கு நல்ல சன்மானம் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

* மெய்ல் என்பது என் நண்பன் "இஸ் மாயிலின்" பெயர்.

பதில்

தணிகைநாதன்.

1. மிருகங்களில் ஒட்டகம் ஒன்றுக்குத்தான் நீந்தத் தெரியாது. அது தண்ணீரில் விழிந்தால் அப்படியே முழுகிப் போய்விடும். அதனால்தான் அது தண்ணீரில்லாத பாலை வனங்களில் சஞ்சரிக்கின்றன போலும்!

2. 'வில்லியம் கிப்பன்' என்பவரே முதன் முதல் 1583 ஆம் வருஷம் ஜூன்மாதம் 18ஆம் தேதி தம்மை 'இன்ஷ்யூர்' செய்து கொண்டார்.

3. நமது வயிற்றிலுள்ள ஜீரணக் கருவிகளுக்கு ஒரு நாளைக்குப் பதினாறு மணி நேரத்திற்குக் குறையாமல் ஒய்வு வேண்டுமென்று வைத்திய நிபுணர்கள் கூறிகின்றார்கள். அதனால்தான் நமது பெரியார் ஒருவர் 'ஒரு வேளை உண்பான்யோகி' என்றார் போலும்!

4. தவளை, பாம்பு, வௌவால் ஆகிய இவைகள் மற்ற ஜந்துக்களைப் பார்க்கிலும் அதிகநாள் ஆகாரமில்லாமல் இருக்கின்றன.

5. 'செயின்ட வின்ஸன்ட்' என்னும் தீவினுள்ள ஒரு பிரமாண்டமான இராட்சத மரமே உலகத்திலுள்ள எல்லா மரங்களிலும் மிகவும் வயதானதென்று சொல்லப்படுகிறது. அதன் வயது 5,000 வருஷம் என்கிறார்கள்.

6. பொதுவாக மண்ணெண்ணைக் கிணறுகளே மற்றெல்லாக்கிணறுகளைப்பார்க்கிலும் மிகவும் ஆழமாகத் தோண்டப் படுகின்றன. அவைகளில் கலிபோர்னியர் நாட்டிலுள்ள ஒரு எண்ணைக் கிணறு இரண்டு மைல் ஆழம் தோண்டப் பட்டிருக்கின்றது;

7. வெளிச்சம் ஒன்றுதான் ஒரே நிமிஷத்தில் உலகத்தை 480 தரம் சுற்றக்கூடிய வேகமுள்ளதாய் இருக்கின்றது. அதே நேரத்தில் சத்தம் 13 மைல் தூரந்தான் சிரமத்துடன் செல்கின்றது.

சினிமா ரஸிகர் சங்கம், மதுரை

ஆரம்பக் கூட்டம்.

1936ம் வருஷம் ஜனவரிமீ 31உ இரவு 9மணிக்கு மதுரை நகர் சினிமாபிரியர்களின் கூட்டம் ஒன்று மதுரைவிட்ட வாசல் தெரு 42வது கட்டிடமடியில் திரு A. S. சேஷய்யர் அவர்கள் தலைமையில் கூடியது. தற்சமயம் தமிழ் சினிமா படம் இருக்கும் நிலைமையிலிருந்து மேன்மையுறவேண்டுவதன் அவசியத்தையுத்தேசித்து சினிமா ரஸிகர் சங்கம் (Film League) ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் 1936ம் வருஷம் பிப்ரவரிமீ இறுதிக்குள் அங்கத்தினர்களைச் சேர்த்து அதின்பின் நிர்வாகஸ்தர்களை தெரிந்தெடுத்து சங்க திறப்பு விழா செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டு அதற்காக ஆரம்பவேலைகளை செய்வதற்காக திருவாளர்களான S. தியாகராஜன் C. சைலம் பிள்ளை (காரியதரிசிகள்) A. S. அருணாசலம் N. கிருஷ்ணசாமி கூட்டத்தலைவர் (மெம்பர்கள்) இவர்களடங்கிய கமிட்டி ஒன்றையும் தெரிந்தெடுக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது சினிமாபிரியர்களெல்லாம் அங்கத்தினராகச் சேரும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றது வருஷ சந்தா அணா 8 இரண்டு தடவையாக செலுத்தலாம்.

மதுரை
1—2—36

S. தியாகராஜன்,
காரியதரிசி.

வி. வி. என். ராவுனுடைய
உலகத்தின் எழு அற்புதங்கள்

ராவுனுடைய

ப்ருங்காமலகா தைலம் (ரிஜிஸ்டர்டு)

மூளைக்குளிர்ச்சிக்கும், மயிர் கொட்டுவதை நிறுத்தி கூந்தலை வளரச்செய்வதற்கும் புட்டி 1க்கு விலை அணா 0—10—6

ராவுனுடைய

சந்தனாதித் தைலம் (ரிஜிஸ்டர்டு)

சிரசைக் குளிரச்செய்வதற்கும் கண், காது மூக்கு சம்பந்த வியாதிகளைப் போக்கடிப்பதற்கும்.

பெரிய புட்டி 1க்கு விலை அணா **0—14—6** சிறிய புட்டி 1க்கு விலை **0-8-0**

ராவுனுடைய

அற்புதமான ஜ்வர நிவாரணி (ரிஜிஸ்டர்டு)

இது மலேரியா, இன்புளுயன்ஸா முதலிய எல்லாவிதமான ஜ்வரங்களுக்கும் கை கண்ட ஔஷதம் புட்டி 1க்கு விலை அணா **0—15—0**

ராவுனுடைய மேலான

ஹிங்காஸ்தகாதி மாத்திரைகள் (ரிஜிஸ்டர்டு)

பெண்களுக்குண்டாகும் மாதவிடாய் கோளாறுகளைத்தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

புட்டி 1க்கு விலை அணா **0—13—0**

ராவுனுடைய

ஷேம்பு தைலம் (ரிஜிஸ்டர்டு)

தேங்காய் எண்ணையால் சுத்தி செய்யப்பட்ட இந்த ஷேம்பு, மண்டையைக் குளிரச்செய்து, மயிரைப் பள பளப்பாக்கும் புட்டி 1க்கு விலை அணா **0—12—6**

வி. வி. என். ராவுனுடைய

தால்ஸ்டைன் லாசென்ஜஸ் (ரிஜிஸ்டர்டு)

இருமல், ஜல தோஷம், நுரை ஈரல் சம்மந்த வியாதிகளுக்கு

புட்டி 1க்கு விலை அணா **0—11—0**

ராவுனுடைய நிகரில்லாத

நோவு அஞ்சனம் (ரிஜிஸ்டர்டு)

சரீரத்தில் உண்டாகும் எல்லா வலிகட்கும், வெட்டு காயங்களுக்கும்.

புட்டி 1க்கு விலை அணா **0—6—6**

முழு விபரம் அடங்கிய கேட்லாக்குக்கு எழுதவும்:—

வி. வி. என் ராவ்ஸ் மெடிகல் ஹால்

57.—பூந்தமல்லி ஐரோட் கீழ்ப்பாக்கம் மதருஸ்

T. M. மருதப்பாவின் தண்டனை குறைக்கப்பட்டது

தின்னனூர் ஸ்டேஷன் மாஸ்டரின் மைனர் புதல்வியான யசோதாம்பாளை சோரம் செய்த தாகவும் அவள் அணிந்திருந்த நகைகள் திருடி யதாக குற்றம் சாட்டப்பட்டு சைதாபேட்டை சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பில் T. M. மருதப்பாவிற்கு இரண்டு குற்றங்களுக் கும் 3½ வருஷம் தண்டனைவிதித்தார் ஷை சைதாபேட்டை சப் டிவிஷனில் மாஜிஸ் டிரேட்டின் தீர்ப்பை எதிரித்து தாக்கல் செய்த அப்பீல் செங்கற்பட்டு செஷன்ஸ் நீதி பதி தீர்ப்பு கூறினர்

“ முதல் எதிரியின் நோக்கம் இரண்டாவது எதிரியை அழைத்துக்கொண்டு செல்ல வேண்டு மென்பதாக இருக்குமானல் T. M. மருதப்பா மோட்டாரில் தின்னனூருக்கு வரவேண்டியது அவசியமில்லை.

2-வது எதிரி நகைகளுடன் சென்னைக்கு வந்து முதல் எதிரியை சந்தித்திருக்கலாம் அதோடு முதல் எதிரி மைனர் சிறுமியை அழைத்துச்செல்ல மாட்டேனென்று கூறி இரு க்கலாம் இந்நிலைமையில் முதல் எதிரி அச்சிறுமியை அழைத்துச் செல்ல மாட்டேனென்று கூறி இருக்கலாம். இந் நிலைமையில் முதல் எதிரி, அச்சிறுமியை சோரம் செயதாரென்பது நிச்சயமாகிவிட்டது மூவரும் புதுச்சேரிக்கு போனதால் பணமுடை ஏற்பட்டிருக்கலாம். நகை 2-வது எதிரிக்கு ச்சொந்தமானவை யென்று கருத நியாயமில்லை 2.வது எதிரியும் மைனர்ச் சிறுமியும் பல கடிதங்கள் எழுதியதின்பேரிலே மருதப்பா அவர்களை அழைத்துச்சென்ருர். ஆகையால் T M. M. தூர் எண்ணத்துடன் சிறுமியை அழைத்துச் சென்றதாக ருஜுபடுத்த முடி யாது. ஆகவே முதல் எதிரிக்கு விதித்துள்ள தண்டனையை 6-மாத தண்டனையாக குறைத்து 2-வது எதிரியின் தண்டனையை குறைக்க காரணமில்லை”

கன்போட் ஜாக்குடன் குத்துச்சண்டை செய்தவர் இறந்தார்.

24—2—36ல் ஜப்பல்ப்பூரில் கன்போட் ஜாக்கிக்கும் லென்பாரோவிற்கும் குத்துச் சண்டை பந்தயம் நடந்தது. 8வது ரௌண் டில் லென்பாரோ கன்போட்டின் குத்தின் வேகம் தாளாமல் மூர்ச்சையானர். உடனே அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். மூர்ச்சை தெளிய எவ்வளவு பாடுபட்டும் பயன் படாமல் ஷை லென்பாரோ இறந்தார்.

நடிக நன்மணி T. D. ருக்மணி பாதுகா பட்டாபிஷேகத்தில் கைகேயியாக நடிக்கிருர்

உலகச் செய்திகள்.

"அமெரிக்காக் குள்ளன்"

அமெரிக்காவில் ஒரு பையன் வயது பதினேழுதாகி யிருக்கிறது. அவன் பெயர் ஜேம்ஸ் என்பதாம். வயது குறைவாக இருந்தபோதிலும் பையன் 'அநியாய'மாக வளர்ந்து விட்டான். எழுடிக்கு மதிகமாக வளர்ந்திருக்கிறான். அவனை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் சென்னைவாசிகளில் சிலருக்குச் சென்ற வாரம் கிடைத்தது. எலிபின்ஸ்டன் டாக்கிவில் இப்பொழுது ஷர்லிடெம்பிள் நடிக்கும் "குழந்தையே! ஒருமுறை வணங்கு" என்ற பெயருடன் கூடிய மிகச் சிறந்த படம் காட்டப்பட்டு வருகிறது. அதோடு, மேலே குறிப்பிட்டுள்ள பையனின் படமும் காட்டப்பெறுகிறது. பையன் நின்றுகொண்டான். அவனுக்கு இருபுறத்திலும் சுமார் ஐந்தரை அடி உயரமுள்ள நான்கைந்து பெண்கள் நின்றுகொண்டனர். பையன் தன் இரு கைகளையும் அகல விரித்தான் அக்கைகளை அப்பெண்களால் எவ்வளவு உன்னி நின்றும் தொடமுடியவில்லை.

பையனது காலுக்குப் புது பூட்ஸ்கள் தைக்கத் தீர்மானிக்கப்பட்டது, அடிக்காலின் அளவு பார்ப்பதற்காக அவன் காலைத் தூக்கினான். ஒரு அடிக் கோலைக் கொணர்ந்தான். 'சீ! சீ! கொண்டாங்கோ கஜக்கோலை' என்றார் ஒருவர். காலின் நீளம் 18¼ அங்குலம், அதாவது ஒன்றரை அடியும் காலங்குலமுமிருந்தது. நன்றாக வளர்ந்த பாதத்தின் அளவு சாதாரண மாக முக்காலடி அல்லது அதற்கு மேல் ஒரு அங்குலமிருக்கும். அந்தக் 'குள்ளப் பைய'னுக்கு எவ்வளவு பெரிய நிலைகள் வைத்த வீடு கட்ட வேண்டும்? பாவம்! அவன் குனிந்து குனிந்து ஒவ்வொரு வாசற்படியிலும் சிரமத்துடன் நடந்து போவதைப் பார்க்கும் பொழுது கஷ்டமாகத்தானிருக்கிறது.

பெண் ஆணான விந்தை

கலிகாலமையா, கலிகாலம்! ஸீகோஸ்லோவேகியாவில் ஒரு பெண் அவள் பெயர் மிஸ். கொவ் கோவா. அவள் பலே கைகாரி. ஓட்டப் பந்தயங்களிலும் மற்றும் பலவித ஆட்டங்களிலும் பிரசித்தி பெற்றிருந்தாள். அந்தப் பெண்ணை டாக்டர்கள் இப்பொழுது ஆணாகமாற்றிவிட்டார்கள். அவர்கள் அதற்காகச் செய்தது ஒரு நுட்பமான ஆபரேஷனேயாகும். இப்பொழுது அவ்வாறு ஆணான அப்பெண்ணின் பெயர் மிஸ்டர் ஸ்டெனியா கோபெக். அந்த அம்மாள் ஆணாக மாறியது அவ்வளவு கஷ்டமான காரியமில்லை என்பது அந்த அம்மாளுடன் இவ்வளவு நாள் பழக்கப்பட்டு வந்த நண்பர்கள் இனி அந்த அம்மாள் பெண்ணல்ல என்பதை நினைவில் வைத்துக்கொண்டு பேசும் பொழுது படும் பெருங் கஷ்டத்திலிருந்து தெரியவரும்'

உலகில் சராசரி அனுதினமும் 60,000 பிள்ளைகள் பிறக்கின்றன, அதே சமயத்தில் 40,000 பேர் மரிக்கின்றனர். ஆக, வருஷத்தில் உலக ஜனத்தொகை 60,00,000 வீதம் அதிகரிக்கிறது

ஸ்பெயின் தேசத்தில் உள்ள காருணா என்னுமிடத்தில் ஒரு தாய்க்கும் அவளுடைய மகளுக்கும் ஏக காலத்தில் பிறந்த இரு ஆண் பிள்ளைகளைப் பராமரித்து வந்த ஒரு தாதி தற்செயலாய் இரு குழந்தைகளையும் கலந்து விட்டாளாம். தாயாருக்கு தன் மகன் எதுவென்றும், மகளுக்கு தன் மகன் எதுவென்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. மகளுடைய புருஷன் எங்கே தான் மைத்துனனுடைய தகப்பனாகிவிட நேர்ந்து விடுமோ என்று குழம்பி இருப்பதாகத் தெரிகிறது!

அஜாகஸ் என்னும் பேர் வாய்ந்த 9 வயதுள்ள நாய் ஒன்று சிலதினங்களுக்கு முன் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் உள்ள இல்லினய்ஸ் என்னுமிடத்தில் இறந்து விட்டது. அவசியமானல் மனிதன் கூட இறைப்பை இல்லாமல் ஜீவிக்கக்கூடும் என்று ரூபித்துக் காட்டும்படி பேர் போன டாக்டர் அன்ரூ கான்வே ஐவி என்பவர் 6 வருஷங்களுக்கு முன்பே இந்த நாயின் இரைப்பை முழுதும் அறுத்து எடுத்து விட்டார் இவ்வளவு நாளுக்கு வயிறு இல்லாமல் தான் ஜீவித்து வந்தது.

ஏதோ சில நூதனபொருட்களைப்பற்றிக் கேள்விப்பட எல்லாருக்கும் ஆசை. அவைகளில் சில விழிக்கவேண்டுகின்கிறவனை மாத்திரம் எழுப்பி விடக்கூடிய அலாரம்; சாவி கொடுக்க நேரம் ஆகிவிட்டது என தன்னுடைய சொந்தக்காரனுக்கு எச்சரிப்பு கொடுக்கும் பாக்கெட் கடிகாரம் சிறு பிள்ளைகளால் கொளுத்தப்படமுடியாத நெருப்புக்குச்சி; சீவுவதற்கு அவசியமே இல்லாத அதாவது ஈயம் தேயத் தேய கட்டையும் தானகவே தேய்ந்து கொண்டே செல்லும் பென்சில் முதலியனவாகும்.

சென்னை நகரில் குடியிருக்க வீடுகளில்லாமல் காலி மண்டபங்களிலும் வீட்டு திண்ணைகளிலும் மாத்தடிகளிலும் தங்கியிருப்பவர்களின் கணக்கு கார்ப்பொரேஷன் அதிகாரிகளால் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குப்படி 7832 ஆண்களும் 2896 பெண்களும், ஆக மொத்தம் 10,728 பேர் சென்னையில் வீடுகளன்றி கஷ்டப்பட்டு வருவதாகத் தெரிகிறது. கூலிகள், ரிக்ஷா இழுப்பவர்கள், பிச்சைக்காரர்கள் இவர்களெல்லாம் இந்தத்தொகையில் சேர்ந்திருக்கிறுர்கள்.

ஸ்டுடியோச் செய்திகள்.

சார்லி சாம்பிளின் பேசும்படத்திலும் நடிப்பதாக தெரியவருகிறது. கூடிய சீக்கிரம் இந்தியாவுக்கு ஷை படம் வருமென்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

சோஞசன்சார்.

என்னும் படம் மிஸ்டர். தேவகி போஸ் அவர்களால் ஹிந்தியில் எழுதி பேசும்படமாக எடுக்கப்போவதாக தெரிகிறது அதில் நம் இந்தியா தேசத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டியவைகள் இருப்பதாக தெரிகிறது.

சந்திரஹாஸா.

என்னும் பேசும் படம் முடிவடைந்து விட்டது. கூடிய சீக்கிரம் பிரபல ஊர்களில் ஓட்டப்படும்.

ஸ்ரீமதி பரிணயம்.

ஸ்ரீராம் டாக்கீஸாரால் பம்பாய் குமார் மூவிடோன் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது. இதில் உயர்தர அமச்சூர் ஸ்திரீ நடிகர்களும் நடிக்கிறுர்கள்.

வசந்த சேன

இதில் V. A. செல்லப்பா. மிஸ் ராஜம். முதலியோர்கள் நடிக்கின்றனர்.

நளாயினி

என்னும் புராணக் கதையை திருப்பூர் ஓரியண்டில் சவுண்ட் பிச்சர்ஸ்சாரால் கோலாப்பூர் ஸ்ரீC.S. செல்வரத்தினம்பிள்ளை முதலியோரை கொண்டு எடுக்கப்போகிறுர்.

மதருஸ் மெயில்

என்னு தமிழ்பேசும் படம் அநேகமாக முடிவடைந்து விட்டது. கூடிய சீக்கிரம் எல்லாஊர்களிலும் காட்டப்படும்.

பக்த குசேலா

யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் சென்னை இவர்களால் ஷி கண்ட படம் கல்கத்தா ஈஸ்டு இந்தியா ஸ்டுடியோவில் தயாராகி வருகிறது.

வீர அபிமன்யூ

தமிழ்நாடு டாக்கீஸிலிருந்துவரும் S. நாராயணசாமி அவர்களால் கல்கத்தாவில் மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

மிஸ். K. சாந்தாதேவி, இவர் சகுந்தலா, பவளக்கொடி, ராதா கல்யாணம், பதி-பக்தி முதலிய பேசும் படங்களில் நடித்து தற்சமயம் நேஷனல் முவிட்டோன் சொந்தக்காரர்களால் தயாரிக்கும் பார்வதி கலியாணத்தில் குறத்தியாக நடிக்கிறார்.

சென்னை

எல்பின்ஸ்டன்	....	தாங்ஸ் எமிலியன்
ராக்சி	....	பேஜ் மிஸ் குளோரி
கெயிட்டி	...	மேனகா
வெஸ்டெண்ட்	....	லீலாவதி சுலோசன
ஸ்டார்	....	மாந்திரீக குதிரை
பிராட்வே	....	தர்மாத்மா
கிரவுன்	....	போஜராஜா
பிரைட்டன்	....	நல்ல தங்காள்
வெல்லிங்டன்	....	தி-லாஸ்ட் அவுட்போஸ்ட்
பாரகாண்	....	மியூட்டினி ஆந்தி பவுன்டி
செலக்ட்	....	குண சுந்தரி
சினிமா சென்டறல்	...	டாவிங்மி ஹீரா
சரஸ்வதி டாக்கீஸ்	....	சதி லீலாவதி
ரீகல் டாகீஸ்	....	காதலின் மாக்கம்

மினர்வா டாக்கீஸ் திறப்புவிழாவை எதிர்ப்பாருங்கள்.

அரியகுடி ராமானுஜ அய்யங்கார் மோட்டார் மோதியது.

பெப்ருவரி மாதம் 24-ம் நாள் காலை 6-30 மணிக்கு அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் ஏறிச் சென்ற மோட்டார் மற்றொரு மோட்டாரில் மோதியது. இவ்வாபத்தால் அய்யங்காருக்கு அதிக காயமில்லை ஆகையால் தான் மாலையில் கோகலே ஹாலில் அவர் நடத்த இருந்த சங்கீத கச்சேரி மாற்றப் பட்டது. ஸ்ரீமான் அய்யங்கார் 23-2-36ல் தான் தேவக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வந்ததாகத் தெரிகிறது.

இன்னிசை இன்பம்

ஸ்ரீ தியாகராஜ பிரம்ம பக்தஜன சபையின் சார்பில் 12-2-36 புதன்கிழமைமாலை 6-மணிக்கு பரமானந்ததாஸ் சோட்டாதாஸ் சத்திரத்தில் சங்கீத வித்வான் சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை வாய்ப்பாட்டு, 'மன்னார்குடி சந்தான மய்யர் பிடில்,' தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்திராவ் மிருதங்கம்,' 'தஞ்சாவூர் ஸ்ரீமான் விட்டல்ராவ் டோலக்' ஆகிய இவர்களால் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

ஸ்ரீமான் செல்வரத்தினம் பிள்ளை அவர்கள் கவுள சாரீரமும் நல்ல சங்கீத புலமையும் பெற்றவர் என்பதுண்மை. அவர் "ரீதி கௌள" "சரஸ்வதி" ஆகிய இராகங்களை விஸ்தாரப்படுத்திய முறை போற்றற்பாலது. நாலுகால சவுக்க கீர்த்தனங்களை அழகாகப் பாடுகிறார். சங்கீதத் துரையில் நன்றாக உழைத்து இருக்கிறார் எனினும் சங்கராபரண இராகம் சிம்ம நந்தனதாளத்தில் 128 அக்ஷரத்தில் பாடிய 'சரவணபவ' சிவ குருபரனே ஓராறுமுகனே' என்ற பல்லவி பாடியது திருப்திகரமாயில்லை; இதைவிட இவர் அழகாக நாலுகால சவுக்க கீர்த்தனங் களையேபாடி இருந்தாலும் போதுமானது.

இப்படிக் கூறுவதால் இவர் சங்கீத புலமை யற்றவர் எனக் கூறுவதாக எண்ணவேண்டாம். 'வாதாபி-கணபதி,' 'பக்திபிக்ஷமீயவே,' 'அநுராக மூலே,' 'பக்கல நிலுபடி,' 'குருலேக எடுவண்டி,' ராமா நின்னே,' 'கமலாம்பிகே,' 'த்யாகயோகவைபவம்' என்னும் கீர்த்தனங்களை அதிக விமரிசையாகப் பாடியுள்ளார். 'வள்ளி மணாளனே,' சண்முகனேகுக,' 'கொண்டாடி வாமயிலே,' தெண்டனிட்டேன் என்று" 'வருவாரை யழைத்துவாடி,' அருட்பா, முதலிய தமிழ்ப் பாடடுகளைப் பாடுகையில் உள்ளம் உருகியது. நல்ல சங்கீத புலமையும் அனுபவமும் வாய்ந்த இவரைப் பிரபல 'சபாக் காரர்கள் கவனித்து, இவர்மேல் நிலையடைய முயர்ச்சிப்பாராக.

நல்ல சங்கீதவளமையும், புலமையும் பெற்ற இவருக்குத் திருவருள் துணை சேருவதாக ஸ்ரீமான் விட்டல்ராவ் அவர்களது புலமையை நண்பர்கள் நன்கறிந்திருப்பாராகையால் விஸ் தரித்து எழுதுவது அவசியமில்லை என் நினைக் கிறோம். இவர் டோலக் வாசிக்கையில் தலையை ஆட்டி பரிகசிக்க இடந்தராமலும் அதிக கஷ்டப்படாமலும் வாசித்த முறையைக் குறிப் பிடாமல் இருக்க முடியவில்லை......என்னே இவரது புலமை! மிருதங்கம் வாசித்த பெரி யாரும் மோசமில்லை என்றே கூறலாம்.

சிறந்த வித்வ சிரோன்மணிகளைக் கொண்டு அவ்வப்போது அரிய பெரிய கச்சேரிகளை நடத்தும் ஸ்ரீ தியாகராஜ பிரம்ம பக்தஜன சபையில் சங்கீத பிரியர் அனைவரும் அங்கத் தினராகச் சேர்ந்து ஷை சபையை அபிவிருத் திக்குக் கொண்டுவர உதவுமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

(சங்கீத பித்தன்

சினிமாராணி மிஸ். K. T. ருக்மணி

ஹட்சின்ஸ் ரிகார்டுகளில் இம்மாதின்
பாடல்கள் ரிகார்டு செய்யப்பட்டிருக்கிறது.
பவழக்கொடி என்னும் நாடக ஸெட்டில்
அல்லிராணியாகவும் நடித்திருக்கிறார்.
இவர் பாடிய ரிகார்டை இன்றேவாங்குங்கள்.

எதிர்பாருங்கள்?

ஸ்ரீமதிகள் T. P. இராஜலக்ஷ்மி M. S. விஜயாள் K. T. ருக்மணி இவர்கள் 'தாய் நாட்டில்' எப்பொழுது தோன்றுவார்கள் என்பதை அடுத்த பத்திரிகையில் எதிர்பாருங்கள்

"தாய் . நாடு"

ஒன்றுவிட்ட ஞாயிறுதோறும் வெளிவரும்.

"தாய் நாட்டில்" தோன்றும் கற்பனைக் கதைகளின்பெயர்கள் புனைப்பெயர் களென அறியவும்; கட்டுரை எழுதி அனுப்ப விரும்புவோர், கைஎழுத்து தெரியுமாறு எழுதி அனுப்பவும். கட்டுரைகளை குறைக்கவோ, கூட்டவோ ஆசிரியருக்கு உரிமையுண்டு.

ஆசிரியர்.

சந்தா விகிதம்.

வருடச் சந்தா	....	....	....	ரூ.	1—0—0
தனிப்பிரதி உள் நாடு	....	....	....		0—0—6
,, சிலோன்	....	....	....		0—0—9
,, வெளி நாடு	....	....	....		0—1—3

விளம்பர விகிதம்.

முழு பக்கம்	....	....	....	10—0—0
அரை பக்கம்	....	....	....	6—0—0
கால் பக்கம்	....	....	...	3—8—0
ராப்பர் உள் பக்கம்	....	....	....	12—0—0
,, வெளி பக்கம்	....	....	....	15—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதி தெரிந்துக்கொள்ளவும்.

மானேஜர் :—

"தாய் நாடு"

66, வாலாஜா ரோட், மவுண்ட் ரோட், மதருஸ்.

அதிசயம் ! அற்புதம் !! ஆச்சரியம் !!!

கெயிட்டி டாக்கீயில்

29—2—36

தமிழில் இதுகாறும் வெளி வந்துள்ள பாடும் பேசும் படங்களை எல்லாம் வெட்கித்தலை குனியச்செய்து நாட்டில் ஜெயக் கொடி நாட்டி வரும்

"மேனகா"

(தமிழ் பேசும் பாடும் படம்)

சென்ற விடமெல்லாம் சிறப்பு.

சென்னையில் அற்புதமிகும் 11-வது வாரமாக

நீடிக்கப்பட்டிருக்கிறது.

லக்ஷக்கணக்கான ஜனங்கள் கேட்டும் கண்டும் களிக்கின்றனர்

நடிகர்கள்.

மிஸ்.	M. S. விஜயாள்	மேனகா.
,,	K. T. ருக்மணி	நூர்ஜஹான்
மிஸ்டர்	T, K. முத்துசாமி	பெருந்தேவி.
,,	T. K. பகவதி	வராகசாமி.
,,	T. K. சங்கரன்	சாம்பசிவ ஐயங்கார் (டிப்டி கலெக்டர்.)
,,	T. K. சண்முகம்	நயனமுகமத்.
,,	N. S கிருஷ்ணன்	சாமா ஐயர்,

For Booking Apply to :—
Sri Shanmugananda Talkies, Company,
Tirupur.

இவர்களது அடுத்த படம் பம்பாய் "மெயில்"

கண்களுக்கு கவர்ச்சியும் குளிர்ச்சியும் தருவது எது? அற்புத காக்ஷிகள் அதிசய சம்பவங்கள் எங்கே?

மதுரை ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸாரது

- பாதுகா -
பட்டாபிஷேகம்.

ஸ்ரீமதி T. D. ருக்மணி, கைகேயி.

ஸ்ரீமான். M. R. கிருஷ்ணமூர்த்தி : இராமர்.
,, T. S. சந்தானம் : பரதர்.
,, P. B. ரங்கர்ச்சாரி : தசரதர்.
மிஸ். லீலாவதி. முதலியோர்கள் நடிப்பார்கள்

விகட வித்வபூஷணம் M. S. முருகேசன், மிஸ் சக்குபாய் நடித்த 1936 அல்லது நவ நாகரீகமென்னும் ஆஸ்யக்கதை இணைக்கப்பெற்றுள்ளது.

70 வயதுடைய தேவாரம்-இராஜாம்பாள் : மந்தரை.

பூனா சரஸ்வதி ஸினிடோனில் தயாரிக்கப்பட்ட அதி அற்புத படத்தை

எதிர் பாருங்கள் ! எதிர் பாருங்கள் !!

பிராட்வே டாக்கீசில்.

படம் வேண்டுவோர் ;—

ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ் மதுரைக்கு எழுதி தெரிந்துக் கொள்ளவும்.

Registered No. M. 3437

WHEN YOU BUY A "ROHIN'S" (Regd.) SNOW,

You buy

INDIAN

and

the best and ideal Face Cream.

It gives perfect protection against the fierce sun, and scorching winds, and renders the complexion smooth and firm. Apply it night and morning and see how much smoother, softer and lovelier it will make your skin.

(Available at all dealers.)

Rohin's Pomade, Hair Oil, Brilliantine, Bathing Oil, Scents, Ottos etc., etc.,

ROHIN'S PERFUMERY WORKS,
MOUNT ROAD, MADRAS.

Edited. Printed & Published by P. M, Batcha Mudaliar, at the Champion Press.
66, Wallajah Road, Mount Road, Madras. Edited by Padman-Chellappan